**ஜனவரி – 28**

# TNPSC துளிகள்

- வேறு எந்த ஒரு சட்டப்பூர்வ வாரிசுகளும் இல்லாத பட்சத்தில், இந்துச் சமூகத்தின் மகள்கள் தங்கள் தந்தையின் சொத்தை, 1956 ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டம் என்ற சட்டத்தின் கீழ், வாரிசு முறையில் பெறுவார்கள் என்று உச்ச நீதிமன்றம் தெளிவு படுத்தியது.
    - தந்தை உயில் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டாலும், சொத்தை வாரிசாகப் பெறுவதில் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களை விட அவர்கள் முன்னுரிமையைப் பெறுவார்கள்.

# தமிழ்நாடு செய்திகள்

## ரவுல் வாலன்பெர்க் பரிசு

- "எவிடன்ஸ்" கதிர் என்று அழைக்கப்படும் ஆரோக்கியசாமி வின்சென்ட் ராஜ், 2022 ஆம் ஆண்டு ரவுல் வாலன்பெர்க் பரிசைப் பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் உருவாக்கி அதற்குத் தலைமை தாங்கி வரும் மதுரையைச் சேர்ந்த எவிடன்ஸ் என்ற அமைப்பில் அவர் ஆற்றியப் பணிக்காக வேண்டி அவர் இந்த விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- தமிழகத்தில் உள்ள தலித் மற்றும் பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எவிடன்ஸ் அமைப்பு செயல்படுகின்றது.
- அவர்களின் பணியைப் பாராட்டி, ஐரோப்பியச் சபையானது கதிருக்கு ரவுல் வாலன்பெர்க் பரிசை வழங்கியுள்ளது.
- ரவுல் வாலன்பெர்க் என்ற பரிசு ஆனது சுவீடன் அரசாங்கம் மற்றும் ஹங்கேரியப் பாராளுமன்றம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது.
- ஹோலோகாஸ்ட் எனப்படும் இனப்படுகொலை மற்றும் இரண்டாம் உலகப் போரின் போது யூத உயிர்களைக் காப்பாற்ற ரவுல் வாலன்பெர்க் மேற்கொண்ட முயற்சிகளின் நினைவாக இந்த விருதானது வழங்கப்படுகிறது.



## பூச்சி முருகன் மற்றும் துரைமுகம் காஜா

- தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவராக பூச்சி முருகனை நியமித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

- முருகன், தணிக்கை வாரியம் மற்றும் தென்னிந்தியத் திரைப்பட கலைச் சங்க அறக் கட்டளை ஆகியவற்றின் ஒரு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.
- மேலும் தமிழகப் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக ‘துரைமுகம்’ காஜாவை நியமித்து ஸ்டாலின் அவர்கள் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.



# தேசியச் செய்திகள்

## பத்ம விருதுகளை மறுத்த நபர்கள்



- மேற்கு வங்காளத்தின் முன்னாள் முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்ஜி மற்றும் முன்னாள் பொதுச் செயலாளர் (மறைந்த) EMS நம்பூதிரிபாத் ஆகியோர் பத்ம விருதுகளை மறுத்த இரு முக்கிய நபர்கள் ஆவர்.


- CPI (M) கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் (மறைந்த) EMS. நம்பூதிரிபாத் தலைவர்களில் முதன்முறையாக பத்ம விருதை மறுத்த முதல் தலைவர் ஆவார்.
- மேலும், 90 வயதான சந்தியா முகோபாத்யாய் என்று அழைக்கப்படும் மூத்த பாடகி சந்தியா முகர்ஜி அவர்களும் இந்த ஆண்டு பத்மஸ்ரீ விருதைப் பெற மறுத்துள்ளார்.

### நெப்டியூன் ஸ்ட்ரைக் 22 பயிற்சி

- NATO அமைப்பின் (வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு) உறுப்பு நாடுகள் மத்தியத் தரைக் கடலில் 12 நாட்கள் அளவிலான ஒரு கடல்சார் பயிற்சியை மேற்கொள்கின்றன.
- இந்தக் கடல்சார் பயிற்சியின் பெயர் "நெப்டியூன் ஸ்ட்ரைக் '22" ஆகும்.
- இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கமானது NATO அமைப்பின் பரந்த அளவிலான சில கடல்சார் திறன்களைப் பறைசாற்றுவதும் அவற்றைச் சோதிப்பதும் ஆகும்.

## சர்வதேசச் செய்திகள்

### சர்வதேச நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கை




- உலகப் பொருளாதார வளர்ச்சியானது முன்பு கணிக்கப்பட்டதை விட அரை சதவீதம் குறையும் என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 5.9% ஆக இருந்த வளர்ச்சியானது 2022 ஆம் ஆண்டில் 4.4% ஆக குறையும்.
- இது 2023 ஆம் ஆண்டில் மேலும் 3.8% ஆக குறையும்.
- சர்வதேச நாணய நிதியத்தின் கணிப்புப்படி, 2021-2022 ஆம் ஆண்டில் இந்தியா 9% அளவிலான வளர்ச்சியை அடையும்.
- 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாத மதிப்பீட்டில், இந்தியாவின் வளர்ச்சி வாய்ப்புகள் என்பது ஆண்டிற்கு 9.5% ஆக உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளது.
- சர்வதேச நாணய நிதியம் ஆனது தற்போது 2022-23 ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதாரம் ஆனது 9% வளர்ச்சியடையும் எனக் கணித்துள்ளது.

- அக்டோபர் மாத மதிப்பீட்டில், 2022-23 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி 8.5% ஆகவும் மற்றும் 2023-24 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி 7.1% ஆகவும் இருக்கும் என்று கணிக்கப் பட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## தேசியப் பங்குச் சந்தை - உலகின் மிகப்பெரிய டெரிவேட்டிவ் பரிமாற்றம்




- 2021 ஆம் ஆண்டில் வர்த்தகம் செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியாவின் தேசிய பங்குச் சந்தையானது உலகின் மிகப்பெரிய டெரிவேடிவ் பரிமாற்றமாக உருவெடுத்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலகப் பரிவர்த்தனைக் கூட்டமைப்பு மேற்கொண்ட புள்ளி விவரங்களின் படி, வர்த்தகங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், பணப் பங்குகளில் தேசியப் பங்குச் சந்தை ஆனது உலகில் நான்காவது இடத்தில் உள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## வீரதீர விருதுகள் - குடியரசு தினம்




- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பாதுகாப்புப் படை வீரர்களுக்கு 384 வீரதீர விருதுகள் மற்றும் இதர ராணுவ விருதுகளை வழங்கினார்.
- இராணுவ நடவடிக்கைகளின் போது தனித்துவம் மிக்கப் பங்களிப்பினை வெளிப் படுத்திய வீரர்களுக்கு 12 சௌர்ய சக்கர விருதுகளையும் அவர் வழங்கினார்.
- ஜம்மு காஷ்மீர் காவல்துறையின் உதவித் துணை ஆய்வாளர் பாபு ராம் என்பவருக்கு (மரணத்திற்குப் பின்) குடியரசுத் தலைவர் அவர்கள் அசோக் சக்ரா விருதை வழங்கச் செய்தார்.

- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 அன்று நடைபெற்ற ஒரு நடவடிக்கையின் போது பாபு ராம் ஸ்ரீநகரில் மூன்று பயங்கரவாதிகளைக் கொன்றார்.
- அசோக் சக்ரா என்பது இந்தியாவின் மிக உயரிய அமைதிக் கால வீரதீர விருதாகும்.
- கீர்த்தி சக்ரா என்பது இந்தியாவின் இரண்டாவது மிக உயரிய அமைதிக் கால வீரதீர விருதாகும்
- சௌர்ய சக்ரா என்பது இந்தியாவின் இரண்டாவது மிக உயரிய அமைதி கால வீரதீர விருதாகும்.

## பத்ம விருதுகள் 2022

### Padma Vibhushan (4)

| Name | Field | State/Country |
|---|---|---|
| Prabha Atre | Art | Maharashtra |
| Radheyshyam Khemka (Posthumous) | Literature and Education | U.P. |
| General Bipin Rawat (Posthumous) | Civil Service | Uttarakhand |
| Kalyan Singh (Posthumous) | Public Affairs | Uttar Pradesh |

- நாட்டின் 73வது குடியரசு தினத்தை முன்னிட்டு மத்திய உள்துறை அமைச்சகம் பத்ம விருதுகளை அறிவித்தது.
- இந்த விருதுகள் மூன்று பிரிவுகளில் வழங்கப் படுகின்றன.
  - பத்ம விபூஷன் (தனித்துவமிக்க மற்றும் சிறப்பான சேவை),
  - பத்ம பூஷன் (உயர் நிலையில் சிறப்பான சேவை), மற்றும்
  - பத்மஸ்ரீ (சிறந்த சேவை).
- பொதுச் சேவையில் சம்பந்தப்பட்ட அனைத்துச் செயல்பாடுகள் அல்லது துறைகளில் மேற்கொள்ளப்பட்ட சாதனைகளை இந்த விருது அங்கீகரிக்கிறது.
- இந்தப் பட்டியலில் 4 பத்ம விபூஷண், 17 பத்ம பூஷண் மற்றும் 107 பத்மஸ்ரீ விருதுகள் ஆகியவை உள்ளடங்கும்.
- இந்த விருது பெற்றவர்களில் 34 பேர் பெண்கள் ஆவர்.
- இந்தப் பட்டியலில் வெளிநாட்டினர்/வெளிநாடு வாழ் இந்தியர்கள்/இந்திய வம்சாவளியினர்/ வெளிநாட்டுக் குடியுரிமை பெற்ற இந்தியர்கள் பிரிவில் இருந்து 10 பேர் மற்றும் மரணத்திற்குப் பின் விருது பெற்றவர்கள் 13 பேர் ஆகியோர்

உள்ளடங்குவர்.

- பத்மஸ்ரீ விருது பெற்ற தமிழர்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| Padma Shri | | |
|---|---|---|
| **Name** | **Field** | **State** |
| Shri Sirpi Balasubramaniam | Literature and Education | Tamil Nadu |
| Shri S Ballesh Bhajantri | Art | Tamil Nadu |
| Shri S Damodaran | Social Work | Tamil Nadu |
| Ms. Sowcar Janaki | Art | Tamil Nadu |
| Ms. R Muthukannammal | Art | Tamil Nadu |
| Shri A K C Natarajan | Art | Tamil Nadu |
| Dr. Veeraswamy Seshiah | Medicine | Tamil Nadu |

## சுபாஷ் சந்திரபோஸ் ஆப்த பிரபந்தன் புரஸ்கர் விருது

- இந்திய அரசானது, சுபாஷ் சந்திரபோஸ் ஆப்த பிரபந்தன் புரஸ்கார் எனப்படும் ஒரு வருடாந்திர விருதை உருவாக்கியுள்ளது.
- இது பேரிடர் மேலாண்மைத் துறையில், இந்தியாவின் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆற்றிய ஒரு விலை மதிப்பற்ற பங்களிப்பையும் தன்னலமற்றச் சேவையையும் அங்கீகரிப்பதற்கான ஒரு விருதாகும்.
- இந்த விருதானது, ஒவ்வோர் ஆண்டும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்த நாளான ஜனவரி 23 அன்று அறிவிக்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான விருதுகளை பெற்றவர்கள்,
    - குஜராத் பேரிடர் மேலாண்மை நிறுவனம் (நிறுவனங்கள் பிரிவில்) மற்றும்
    - பேராசிரியர் வினோத் சர்மா (தனிநபர் பிரிவில்).




# விளையாட்டுச் செய்திகள்

## பரம் விஷிஷ்ட் சேவா பதக்கம்

- குடியரசு தினத்தை முன்னிட்டு ஒலிம்பிக் வீரர் நீரஜ் சோப்ராவுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் பரம் விசிஷ்ட் சேவா பதக்கம் வழங்கி கௌரவித்தார்.

- 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவிற்கான தங்கப் பதக்கம் வென்ற முதல் தடகள வீரர் இவர் ஆவார்.
- நீரஜ் இந்திய ராணுவத்தில் ஒரு சுபேதாராக உள்ளார்.
- இவர் புனேவில் உள்ள ஒலிம்பிக்ஸ் திட்டப் பிரிவு மற்றும் ராணுவ விளையாட்டு நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்கு தேர்வு செய்யப் பட்டார்.
- விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கியதற்காக 2018 ஆம் ஆண்டில் அர்ஜுனா விருதும், 2020 ஆம் ஆண்டில் விஷிஷ்ட் சேவா பதக்கமும் (VSM) இவருக்கு வழங்கப் பட்டது.


Param Vishisht Seva Medal

## முக்கிய தினங்கள்

### இமாச்சலப் பிரதேசம் மாநில தினம் - ஜனவரி 25




- இது இந்த மாநிலத்தின் 52வது மாநில தினமாகும்.
- இது 1948 ஆம் ஆண்டில் இந்திய ஒன்றியத்திற்குள் ஒரு தலைமை ஆணையர் மாகாணமாக நிறுவப்பட்டது.

- பஞ்சாப் மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 அன்று ஒரு ஒன்றியப் பிரதேசமாக இமாச்சலப் பிரதேசம் மாறியது.
- இது 1971 ஆம் ஆண்டில் இந்தியாவின் 18வது மாநிலமாக மாறியது.

## சர்வதேச இனப்படுகொலை நினைவு தினம் - ஜனவரி 27




- இரண்டாம் உலகப் போரின் போது நிகழ்ந்த ஹோலோகாஸ்ட் (இனப் படுகொலை) என்ற துயர நிகழ்வை நினைவு கூறும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் இனப்படுகொலை நினைவு மற்றும் கல்விக்கு வழி காட்டும் கருத்துருவானது "நினைவு, கண்ணியம் மற்றும் நீதி" ஆகும்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2005 ஆம் ஆண்டில் இந்த தினத்தைத் தேர்வு செய்தது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★